**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ஓ.மு.எண்.1479/ஆ5/2025, நாள்.27.03.2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – ஆதிதிராவிடர் நலம் – வேலூர் மாவட்டம் – 2024–2025ஆம் கல்வியாண்டு – அனைத்து அரசு / நகரவை/ ஆதிதிராவிட நல / நிதியுதவி பெறும் அரசு / மேல்நிலைப் பள்ளிகளின் 12–ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் (Career Guidance) முகாம் 29.03.2025 அன்று காலை 9.00 மணியளவில் வேலூர் Dr. R. Jayakaran Issac Indoor Auditorium Voorhees College, Deboer Campus–ல் நடைபெறுதல் – மாணாக்கர்களை கலந்துக் கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண்.கே3/330.2025, நாள். 24.03.2025 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள். 26.03.2025)

.....

பார்வையில் காணும் கடிதத்தில், வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் குறிப்புரையின்படி, **வேலூர், Dr. R. Jayakaran Issac Indoor Auditorium Voorhees College, Deboer Campus–ல் 29.03.2025 (சனிக்கிழமை) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை என் கல்லூரிக் கனவு எனும் உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி** நடைபெறும் எனவும் இதில் அனைத்து அரசு / நகரவை/ ஆதிதிராவிட நல / நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் மார்ச் 2025–ல் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணவ / மாணவியர்கள் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் படி நடைபெறும் என் கல்லூரிக் கனவு எனும் உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியில் அனைத்து அரசு / நகரவை/ ஆதிதிராவிட நல / நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் மார்ச் 2025–ல் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணவ / மாணவியர்கள் அவர்களின் பெற்றோர் / ஆசிரியர் துணையுடன் பாதுகாப்பாக கலந்துக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து / அரசு / நகரவை / ஆதிதிராவிட நல / நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும்.
2. மாணவர்களிடம் எவ்வித கட்டணத் தொகையும் பெறக்கூடாது.

முகவரிக்கு கீழே உள்ள QR Code Scan செய்யவும்

முகவரிக்குகீழேஉள்ளQR – Code scan செய்யவும்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு / நகரவை / ஆதிதிராவிட நல /
நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல் –

1. வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)